*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 168/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திருமதி.சுகந்தி க/பெ. சுப்ரமணி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.06.2025.**

துவக்க நேரம் 03.55 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தம்மம்பட்டியில் உள்ள ஜங்கமசமுத்திரம், குட்டிக்கரட்டில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகள் ஏழுமலை, அருள், சீத்தாராமன், சண்முகம், செல்வராணி ஆகியோர்களை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள்.

2) கடந்த 2021ம் வருடம், 6ம் மாதம் எனது மகளை எனது வீட்டில் விட்டுவிட்டு நானும், எனது மகன் சூரியபிரகாசும் மல்லியகரையில் உள்ள எனது அம்மாவின் வீட்டிற்கு சென்றுவிட்டோம். நான் ஊருக்கு சென்றிருந்த அன்று இரவு எனது மகள் தனியாக இருப்பதை தெரிந்துகொண்டு, ஏழுமலை எனது வீட்டின் கதவை வந்து தட்டினார் என்று, எனது மகள், எனக்கு போன் மூலம் தகவல் சொன்னார்.

3) உடனே எனது கணவர், எனது வீட்டிற்கு சென்றுள்ளார். அதற்குள் ஏழுமலை அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும், மறுநாள் காலை எனது கணவர் ஏழுமலையை கண்டித்துள்ளார் என்றும் கேள்விபட்டேன். பிறகு இரண்டு மாதங்கள் கழித்து 21.08.2021 அன்று காலை 08.00 மணியளவில் மழை பெய்து மழை நீர் எங்களது வரப்பின் வழியாக வழிந்தோடியது. எனது கணவர் உரம் மூட்டையை எடுத்துவந்தவர் வலுக்கி கீழே விழுந்துவிட்டார்.

4) அப்பொழுது எனது கணவர், செல்வராணியிடம் உங்க வரப்ப கட்டியிருந்தா மழை தண்ணி உங்க வயல்லியே இருந்திருக்கும், நான் ஏற்கனவே உங்க வரப்ப கட்டசொன்ன, நீங்க வரப்ப கட்டாம விட்டதாலதான் மழை தண்ணி எங்க வரப்புல வந்து நான் வலுக்கி விழுந்திட்டேன் என்று சொன்னார். அதற்கு எதிரி செல்வராணி வரப்பெல்லாம் கட்ட முடியாது என்று சொல்லிவிட்டு, ஏழுமலைக்கு செல்வராணி போன் செய்து பேசியுள்ளார்.

5) அன்றே இரவு 07.00 மணியளவில், நானும், எனது மகன், மகள் ஆகியோர் வீட்டிற்குள் இருந்தோம், எனது கணவர் வாசலில் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது அங்கு வந்த எதிரிகள் ஏழுமலை, அருள், சீத்தாரமன், சண்முகம் ஆகியோர் எனது கணவரை பார்த்து வாடா தேவடியா மகனே நீ அம்பளையா இருந்தா வெளிய வாடா தேவடியாக மவனே, உன்ன கொல்லாம விடமாட்டேன் என்று சொல்லி பேசினார்கள்.

6) பின்பு ஏழுமலை, எனது கணவரின் கன்னத்தில் அடித்துவிட்டார். அருள் என்பவர் இரும்பு கம்பி எடுத்துவந்து, எனது கணவரின் தலையின் மீது அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார். உடனே எனது கணவர் கீழே விழுந்துவிட்டார். சத்தம் கேட்டு நானும், எனது மகன் சூரியபிரகாசும் வெளியே சென்று பார்த்தோம். எனது மகனை பார்த்த, அருள்குமாரும், இன்னொரு பையனும் இரும்புராடால் எனது மகனின் முகத்தில் அடித்துவிட்டார். எனது மகனுக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டது. அதனை தடுக்க சென்ற என்னையும், செல்வராணி உன்னாலதாண்டி தேவடியா இவ்வளவும் ஆனது என்று சொல்லி எனது முடியை பிடித்து இழுத்து, எனது முதுகில் ஓங்கி குத்திவிட்டார்.

7) அய்யோ அம்மா என்று நான் சத்தம் போட்டேன், எனது சத்தம் கேட்டு பக்கத்து காட்டுக்காரர்கள் வந்தார்கள். பின்பு 108 ஆம்புலன்சு வந்து, அடிபட்ட எங்களை தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்பு ஆத்தூர் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக எனது மகனும், கணவரும் வந்து சேர்ந்தார்கள்.

8) ஆத்தூர் அரசு மருத்துவமனையில் எனது கணவருடன் நான் இருந்தபொழுது, தம்மம்பட்டி காவல் நிலைய போலிசார் வந்து, என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 04.15 A.N

C UDAYASUNDARAM Digitally signed by C UDAYASUNDARAM Date: 2025.06.19 16:55:18 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 168/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.சுப்ரமணி த/பெ. ஆறுமுகம்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.06.2025.**

துவக்க நேரம் 04.16 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தம்மம்பட்டியில் உள்ள ஜங்கமசமுத்திரம், குட்டிக்கரட்டில் வசித்து, விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். சாட்சி சுகந்தி, எனது மனைவி ஆவார். எதிரிகள் ஏழுமலை, அருள், சீத்தாராமன், சண்முகம், செல்வராணி ஆகியோர்களை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள்.

2) எதிரி ஏழுமலை சொந்தமாக செங்கல் சூளை வைத்துள்ளார். மழை பெய்தால் செங்கல் சூளை அமைக்கப்பட்டுள்ள வயலில் தண்ணீர் தேங்கும். அந்த தண்ணீரை எனது வயல் பக்கம் திருப்பிவிடுவார். அந்த மணலெல்லாம் அடித்துக்கொண்டு வந்து எனது வயலில் தேங்கி நிற்கும். நான் அவ்வாறு செய்யக்கூடாது என்று சொல்லியும் அவர் கேட்காமல் எனது வயலுக்கு செல்லும் தடத்தின் வழியாக திருப்பிவிட்டார்.

3) கடந்த 21.08.2021 அன்று மாலை 05.30 மணியளவில் மழை பெய்து மழை நீர் எங்களது வரப்பின் வழியாக வழிந்தோடியதில், நான் உரம் எடுத்துக்கொண்டு திரும்பி வரும்பொழுது வரப்பில் நீருடன் அடித்துவந்த மண் வலுக்கி விழுந்துவிட்டேன். உடனே நான் அங்கிருந்த செல்வராணியிடம் நான் தண்ணியை இந்த பக்கம் திருப்பி விடாதிங்கன்னு சொன்ன, பாருங்க வரப்பு

சேறாகி நான் கீழ விழுந்துட்டன் என்று சொன்னேன், அதற்கு செல்வராணி என்னை கெட்ட வார்த்தையால் திட்டி எங்க வரப்பலாம் கட்டமுடியாது என்று கூறினார். அவர்களுக்கு நான் தடமெல்லாம் விட்டிருந்தேன், எனக்கு இப்படி பண்ணிட்டிங்களே என்று பேசிவிட்டு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன்.

4) அன்று இரவு 07.00 மணியளவில், நான் வீட்டில் இருந்தபொழுது, எதிரிகள் ஏழுமலை, அருள், சீத்தாரமன், சண்முகம், செல்வராணி ஆகியோர்கள் வந்து, எனது வீட்டிற்கு முன்பிருந்த ரோட்டில் நின்று கெட்ட வார்த்தையால் பேசி, இப்ப வாடா உன்ன நான் பேசிக்கிறேன் என்று சொல்லி ஏழுமலை, என்னை கன்னத்தில் ஜப்பு ஜப்பு என்று அடித்துவிட்டார். அருள்குமார் இரும்பு கம்பியால், எனது தலையின் மீதும், முகத்திலும் அடித்துவிட்டார். நான் கீழே விழுந்துவிட்டேன். சீத்தாராமன் எனது அம்மாவின் பெயரை உச்சரித்து கெட்ட வார்த்தையால் பேசி, என்னை எட்டி எட்டி உதைத்தார்.

5) என்னை அடிப்பதை பார்த்த எனது மனைவியும், எனது மகனும் சண்டையை தடுக்க வந்தார்கள். எனது மனைவியை, செல்வராணி முடியை பிடித்து இழுத்து முதுகில் குத்தி அடித்தார். எனது மகனை, அருளும், சண்முகமும் கீழே கிடந்த பைப்பை எடுத்து எனது மகனின் முகத்தில் அடித்துவிட்டார்கள்.

6) எனக்கு வலி தாங்க முடியாமல் நான் கத்திக்கொண்டிருந்தேன். அக்கம் பக்கம் இருப்பவர்கள் வருவதை பார்த்த எதிரிகள் இன்னிக்கி தப்பிச்சிட்ட என்னைக்கா இருந்தாலும் உன்ன கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டிவிட்டு, கையில் இருந்த பைப்பை அந்த இடத்திலேயே போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். அங்கிருந்தவர்கள் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்து, முதலில் காவல் நிலையத்திற்கு சென்றோம். எங்களை பார்த்த போலிசார் முதலில் மருத்துவமனைக்கு செல்லச்சொல்லி அனுப்பிவைத்தார்கள். நாங்கள் தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்ந்தோம். எனக்கு

இரண்டு, மூன்று மணிநேரம் கழித்துதான் சுயநினைவு திரும்பியது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 04.29 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.19 16:55:26 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 168/2024***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-3)***

*Name / Father's Name:* ***திரு.சூரியபிரகாஷ் த/பெ. சுப்ரமணி***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.06.2025.**

துவக்க நேரம் 04.30 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது தம்மம்பட்டியில் உள்ள ஜங்கமசமுத்திரம், குட்டிக்கரட்டில் வசித்து, சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சுகந்தி, எனது அம்மா. சாட்சி சுப்ரமணி, எனது அப்பா. எதிரிகள் ஏழுமலை, அருள், சீத்தாராமன், சண்முகம், செல்வராணி ஆகியோர்களை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள்.

2) எதிரி ஏழுமலை சொந்தமாக செங்கல் சூளை வைத்துள்ளார். மழை பெய்தால் செங்கல் சூளை அமைக்கப்பட்டுள்ள வயலில் தண்ணீர் தேங்கும். அந்த தண்ணீரை எங்களது வயல் பக்கம் திருப்பிவிடுவார். அந்த மணலெல்லாம் அடித்துக்கொண்டு வந்து எங்களது வயலில் தேங்கி நிற்கும். எனது அப்பா அவ்வாறு செய்யக்கூடாது என்று சொல்லியும் அவர் கேட்காமல் எனது வயலுக்கு செல்லும் தடத்தின் வழியாக திருப்பிவிட்டார்.

3) கடந்த 21.08.2021 அன்று காலை மழை பெய்து, எங்கள் தடத்தில் ஏழுமலையின் செங்கவல் சூளை அமைத்த வயலில் இருந்து தண்ணீர் வந்து வரப்பு சேராகி, எனது அப்பா வலுக்கி கீழே விழுந்துவிட்டார். அன்று இரவு 07.00-07.30 மணியளவில் எனது அப்பா வீட்டில் இருந்தபொழுது, எதிரிகள் ஏழுமலை, அருள், சீத்தாரமன், சண்முகம், செல்வராணி ஆகியோர்கள் வந்து, எங்களது

வீட்டிற்கு முன்பிருந்த ரோட்டில் நின்று எனது அப்பாவை கெட்ட வார்த்தையால் பேசி, இப்ப வாடா உன்ன நான் பேசிக்கிறேன் என்று சொல்லி ஏழுமலை, என் அப்பாவின் கன்னத்தில் ஜப்பு ஜப்பு என்று அடித்துவிட்டார். அருள்குமார் இரும்பு ராடால், எனது அப்பாவின் தலையின் மீது அடித்துவிட்டார். சீத்தாராமன், எனது அப்பாவை கெட்ட வார்த்தையால் பேசி, எனது அப்பாவை எட்டி எட்டி உதைத்தார்.

4) எனது அப்பாவை, எதிரிகள் அடிப்பதை பார்த்த நானும், எனது அம்மாவும் சண்டையை தடுக்க வந்தோம். அப்பொழுது அருள்குமார், எனது இடதுபக்க வாயின்மீது அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார். (சாட்சி நீதிமன்றத்தில் தழும்பை காண்பித்தார்). என்னை அடிப்பதை பார்த்து தடுக்க வந்த எனது அம்மாவையும், எதிரி செல்வராணி கெட்ட கெட்ட வார்த்தையால் பேசி, மயிரை பிடித்து இழுத்து அடித்துவிட்டார். பிறகு அக்கம் பக்கம் இருப்பவர்கள் வருவதை பார்த்த எதிரிகள், இன்னிக்கி தப்பிச்சிட்டிங்க என்னைக்கா இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார்கள்.

5) பின்பு 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து வரவழைத்து, முதலில் தம்மம்பட்டி அரசு மருத்துவமனைக்கு சென்று, அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்கு சேர்ந்தோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜரில்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 04.41 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.19 16:55:33 +0530

Judicial Magistrate No.2, Attur.